DMCOURTKUNNAM

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**
**அசல் வழக்கு எண். 350/2021**

2025- ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதாகர் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ரெங்கநாதன் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | வரகூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 48/2025 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. என்னுடைய கொள்ளு தாத்தா பெயர் அருணாசலம் என்றால் சரிதான். அருணாசலத்திற்கு முத்தையா, சின்னதம்பி என்ற இரு மகன்கள் என்றால் சரிதான். முத்தையன் என்பவருக்கு கோவிந்தசாமி, ராமசாமி என்ற இரு மகன்கள் என்றால் சரிதான். சின்னதம்பிக்கு நாராயணன், பொன்னுசாமி, ராமலிங்கம் , தங்கவேல் என்ற 4 மகன்கள் என்றால் சரிதான். பொன்னுசாமிக்கு 3 மகன்கள் என்றால் சரிதான். பொன்னுசாமியின் மூத்த மகன் பெயர் பிச்சைபிள்ளை என்றால் சரிதான். பிச்சைபிள்ளைக்கு ரெங்கநாதன், ஜெகதீசன் என்ற இரு சகோதரர்கள் என்றால் சரிதான். அதில் ரெங்கநாதன் என்னுடைய தந்தை என்றால் சரிதான்.

2. என்னுடைய சின்ன தாத்தா தங்கவேலுவின் மகன் பெயர் கிருஷ்ணமூர்த்தி என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தியின் மகன் பெயர் செல்வகுமார் , செல்வகுமாரின் மகன்கள் இவ்வழக்கின் வாதிகள் என்றால் சரிதான். தாவா வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் தெரிந்து கொண்டேன். தாவா சொத்து சர்வே எண். 69/3B ல் 8 சென்ட் உள்ளது. மேற்படி நிலமானது புஞ்சை நிலமாகும். சர்வே எண. 69/3 ல் மொத்த விஸ்தீரணம் 32 சென்ட் நிலமாகும். மேற்படி 32 சென்ட்டும் அருணாசலத்திற்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான். அருணாசலத்தின் மகன்கள் முத்தையன்,. சின்னதம்பி ஆகியோர் குடும்ப சொத்துக்களை வாய்மொழி குடும்ப ஏற்பாடாக பிரித்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. முத்தையனும் சின்னதம்பியும் குடும்ப சொத்துக்களை எப்படி பிரித்துக்கொண்டார்கள் என்று தெரிந்து கொள்ளவில்லை. முத்தையனும் சின்னதம்பியும் பாகம் பிரித்து கொண்டதற்கான அட்டவணை எதுவும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 69/3B என்பது 69/3B1. 69/3B2,69/3B3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 69/3B1 என்ற நிலம்

நாராயணசாமி பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 69/3B2 கோவிந்தசாமி பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. தாவா வழக்கு சொத்தின் தென்புறம் ஓடை உள்ளது என்றால் சரிதான். வடபுறம் ஜெகதீசன் என்பவரின் நிலம் என்றால் ஜெகதீசன் மற்றும் பொன்னுசாமி ஆகியோருக்கு உள்ளது. மேல்புறம் தங்கம்மாள் என்பவரின் நிலம் உள்ளது என்றால் சரிதான். தங்கம்மாள் என்பவர் எனது சின்ன தாத்தா ராமலிங்கத்தின் மருமகள் என்றால் சரிதான். தங்கம்மாள் என்பவரின் நிலமும் சர்வே எண். 69/3B ல் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்து ஏற்கனவே சேப்பெருமாள் என்பவர் பெயரில் தவறுதலாக பட்டா மாறி உள்ளது என்றால் சரிதான். சேப்பெருமாள் பெயரில் தவறுதலாக பட்டா மாறி உள்ளதை ரத்து செய்து தங்கள் பெயரில் பட்டா மாற்ற வாதிகளின் தாத்தா கிருஷ்ணமூர்த்தி 6–ம் பிரதிவாதியிடம் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

5. 6–ம் பிரதிவாதி விசாரணை செய்து சேப்பெருமாள் பெயரில் உள்ள பட்டாவை நீக்கி கிருஷ்ணமூர்த்தி, தங்கம்மாள், ராஜ்குமார் மூவர் பெயரிலும் பட்டா வழங்க உத்தரவிட்டுள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகுதான் கிருஷ்ணமூர்த்தி அவரது பேரன்களான வாதிகள் பெயரில் தானசெட்டில்மென்ட்டாக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வட்டாட்சியர் விசாரணையில் அனைவரையும் விசாரித்துதான் பட்டா மாற்றி கொடுத்தார் என்றால் எங்கள் குடும்ப உறுப்பினர்களை விசாரணை செய்யவில்லை. என்னுடைய த ந்தை 4–ம் பிரதிவாதி தாவா சொத்திற்கான பட்டாவில் தங்கள் பெயரையும் சேர்க்க வேண்டும் 7–ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்தோம் என்று எங்களது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. 7–ம் பிரதிவாதி இது சம்பந்தமாக விசாரணை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார். 7–ம் பிரதிவாதியிடம் எனது தந்தை கொடுத்த மனுவின் நகலையும் 7–ம் பிரதிவாதி பிறப்பித்த உத்தரவின் நகலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகளின் தாத்தா கிருஷ்ணமூர்த்தி எங்களுக்கும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குன்னம் காவல் நிலையத்தில் வாதிகளின் தாத்தா எங்கள் பெயரில் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் இருந்து ஆய்வாளர் வந்து வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னாடியே வாதிகளின் தாத்தா கிருஷ்ணமூர்த்தி தாவா சொத்தின் கீழ்புறம் உள்ள பாதையை நாங்கள் ஆக்கிரமித்துவிட்டதாக சொல்லி வட்டாட்சியரிடம் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய எதிர் வழக்குரையில் நாராயணசாமி தனது பாகத்தினை பொன்னுசாமிக்கு

DMCUMUCOURT, CUMM

கிரயம் கொடுத்துவிட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. பொன்னுசாமி சொத்தை பிச்சைபிள்ளைக்கு கொடுத்துவிட்டார் என்று எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அது எவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதற்கும் அதற்கான ஆவணமும் எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. நான் தாக்கல் செய்த பி.வா.த.சா.ஆ 4 ஆன செட்டில் மென்ட் ஆவணம் வாதிகளின் பெயரில் அவரது தாத்தா செட்டில் மென்ட் எழுதி வைத்து ஒரு மாத காலத்திற்கு பின்னால் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தை சின்னதுரை, சின்னம்மாள், அன்பழகன் ஆகியோர் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு செட்டில் மென்ட் எழுதி வைத்தவர்கள் தான் மேற்கண்ட சொத்தை அனுபவம் செய்தார்கள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த செட்டில்மென்ட் ஆவணத்தில் என்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரிந்து கொண்டேன்.

9. செட்டில் மென்ட்டை எழுதி கொடுத்தவர்கள் அந்த சொத்து எவ்வாறு கிடைத்தது என்று சொல்லியுள்ளார்களா என்றால் கோட்டாட்சியர் உத்தரவுப்படியும், சின்னதுரைக்கு அவரது தந்தை எழுதி கொடுத்த ஆவணப்படியும் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. சின்னதுரைக்கு அவரது தந்தை எழுதி கொடுத்த ஆவணத்தை நான் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அதை தாக்கல் செய்தால் மேற்படி வழக்கு சொத்தில் அவர்களுக்கு உரிமை உள்ளதா என்று தெரியவரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த செட்டில்மென்ட் பத்திரத்திலய யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் ஜெகதீசன், மற்றொருவர் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

10. வாதிகள் தாக்கல் செய்த வழக்கில் கோட்டாட்சியர் விசாரணை செய்யாமல் பிரதிவாதிகள் பெயரையும் சேர்த்து பட்டா வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். கோட்டாட்சியர் விசாரணை செய்யாமல் பிறப்பித்த உத்தரவின் பெயரில் வாதிகளுக்கு தெரியாமல் பட்டா மாற்றம் செய்து விவகாரத்திற்காக ஒரு தான செட்டில்மென்ட் ஆவணத்தை எனது தந்தை என் பெயரில் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.த.சா.ஆ 2,3,5 ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதவை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ 1 மற்றும் 4 ஆவணங்கள் விவகாரத்திற்காகவும் வாதிகளின் உரிமையையும் ஏமாற்றுவதற்காகவும் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

11. வழக்கு சொத்து வாதிகளின் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து வாதிகளுக்கு தானசெட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தானசெட்டில்மென்ட் பத்திரப்படி வாதிகள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து எங்களுக்கு

எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வாதிகளின் தாத்தா எங்களுக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்து அதை நாங்கள் பெற்று கொண்டோம் என்றாலும், அதற்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் அதன் பின்னிட்டு கிருஷ்ணமூர்த்தி எங்கள் பெயரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடந்தது என்றும் ஆனால் மேற்படி விபரங்கள் எனக்கு தெரிந்தும் அதை மறைத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM